

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.5.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய சூரை மீன்பிடி துறைமுகத்தை திறந்து வைத்து, மீன்வளத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கத்தினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், சுதர்சனம், காதர்பாட்சா முத்துராமலிங்கம், துரை சந்திரசேகர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திருமதி. இரா.கஜலட்சுமி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.5.2025) சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மகளிர் கூட்டுக் குழுக்களுக்கு நுண்கடன் வழங்கும் "அலைகள்" திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு கடன் உதவித் தொகைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், சுதர்சனம், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திருமதி.இரா.கஜலட்சுமி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மீனவர்களுக்காக ரூ.1,000 கோடியில் நலத்திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

முன்னெடுப்புகளையும் பட்டியலிட்டு சொல்ல வேண்டும் என்றால்,

- தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக, 19 ஆயிரத்து 997 பயனாளிகளுக்கு, பல்வேறு நிவாரணம் மற்றும் உதவித் தொகை திட்டங்களின்கீழ் 25 கோடியே 68 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.
- கடந்த 4 ஆண்டுகளில் 121 மீன்வள உட்கட்டமைப்பு அந்த பணிகளுக்காக மொத்தம் 1,849 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- 46 புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்க 626 கோடியே 12 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 34 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.
- 29 மீன் இறங்குதள மேம்பாட்டு பணிகளுக்காக 85 கோடியே 52 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 17 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.
- 11 புதிய மீன் பண்ணைகள் கட்டுமான பணிகளுக்கு 49 கோடியே 79 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 9 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.
- இப்போது இருக்கக்கூடிய 14 அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்த 46 கோடியே 85 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 13 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.
- புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் அமைப்பது குறித்த 12 ஆய்வுப் பணிகளுக்கு

9 கோடியே 45 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 7 பணிகள் முடிக்கப்பட்டி ருக்கிறது.

- 8 கோடி ரூபாய் செலவில், 2 பயிற்சி நிலைய பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது.
- 7 மீன்பிடித் துறைமுகப் பணிகளுக்கு 258 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, 4 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. மற்ற பணிகள் எல்லாம் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அந்தப் பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 2023ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் மீனவ மக்களுக்காக ஒரு சிறப்பு மாநாட்டை நடத்தி அதில் நான் கலந்துகொண்டேன். ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்பிலான மீனவர் நலத்திட்டங்களை அந்த மாநாட்டில் நான் அறிவித்தேன். அந்தத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவித் தொகை 5 ஆயிரம் ரூபாயில் இருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ், 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

### ரூ.518.53 கோடி செலவில் நிவாரணம் வழங்கப்பட்டது!

கடந்த 4 ஆண்டுகளில், 518 கோடியே 53 இலட்சம் ரூபாய்க்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

- மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படக்கூடிய வரி விலக்களிக்கப்பட்ட டீசல் 18 ஆயிரம் லிட்டரில் இருந்து 19 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில், 4 இலட்சத்து 34 ஆயிரத்து 668 கிலோ லிட்டர் அளவுக்கு மானிய டீசல் விநியோகிக்கப்பட்டு இருக்கிறது.
- மீன்பிடி நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்படுகின்ற வரி விலக்களிக்கப்பட்ட டீசல் 4 ஆயிரம் லிட்டரில் இருந்து 4 ஆயிரத்து 400 லிட்டராக உயர்த்தப்பட்டு, 12 ஆயிரத்து 592 மீன்பிடி படகுகளுக்கு வழங்கப்படுகிறது.
- அதேபோல, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தின் நாட்டுப்படகுகளுக்கு வழங்கப்படக்கூடிய தொழிலக மண்ணெண்ணெய் 3 ஆயிரத்து 400 லிட்டரில் இருந்து 3 ஆயிரத்து 700 லிட்டராக உயர்த்தப்பட்டு, 5 ஆயிரத்து 930 நாட்டுப்படகுகளுக்கு வழங்கப்படுகிறது.
- மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ், 12 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் மானியத்தில் 1,000 உள் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.
- மீனவர்களுக்காக கட்டப்பட்ட 8 ஆயிரத்து 561 வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.
- 1 இலட்சத்து 20 ஆயிரம் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் தொழில் புரிய உழவர் கடன் அட்டை, கூட்டுறவுக் கடன், மகளிர் திட்டம், சுயஉதவிக் குழு கடன் ஆகியவற்றின் கீழ் 1,528 கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது.
- தங்கச்சிமடம், குந்துகால், பாம்பன் ஆகிய இடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக 356 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளை எல்லாம் விரைவில் தொடங்கப் போகிறோம்.

### மீனவர்களின் துயரங்களை போக்கும் திராவிட மாடல் அரசு!

மீனவர்கள் துயரங்களை எதிர்கொள்ளும் தருணங்களில் உங்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதில் முனைப்போடு இன்றைக்கு திராவிட மாடல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!

- கடலில் மீன் பிடிக்கும்போது காணாமல் போகும் மீனவர்கள் மற்றும் கடலில் மீன் பிடிக்கும் போது அண்டை நாட்டு அரசால் கைதுசெய்யப்படும் மீனவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் தின உதவித் தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தினோம். பிறகு, 500 ரூபாயாகவும் உயர்த்தினோம்.
- 'மாண்டஸ்' புயலால் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக 4 கோடியே 67 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் கச்சா எண்ணெய் கலந்ததால், எண்ணூர் மற்றும் அதை சுற்றியிருக்கும் மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்களின் மீன்பிடிபடகுகள், வலைகள் சேதமடைந்ததை தொடர்ந்து, மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காக 3 கோடியே 66 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காக இதையெல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

### மீன் பிடி உபகரணங்களுக்காக வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்!

- அதுமட்டுமல்ல, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக 14 கோடியே 53 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.
- மீனவர் குழு விபத்து காப்பீடு இல்லாத காலத்தில், இறந்த 176 இறந்த மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய், நிரந்தர உடல்குறைபாடு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு மீனவருக்கு 1 இலட்சம் ரூபாய் என்று மொத்தம் 3 கோடியே 53 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது.
- அண்மை கடற்பகுதியில் மீன்வளத்தை அதிகரிப்பதற்காக, சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், மயிலாடுதுறை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், 49 மீனவ கிராமங்களில், 200 செயற்கை மீன் உறைவிடங்கள், 62 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.
- மிதவைகள் மற்றும் கயிறு மூலம் கடற்பாசி வளர்ப்பு மேற்கொள்ள 1,863 மீனவ மகளிருக்கு 2 கோடி ரூபாய் மானியத் தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது.
- மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 127 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் 'ஒருங்கிணைந்த பல்நோக்கு கடல்பாசி பூங்கா' அமைக்கும் திட்டத்தின் நாம் நிறைவேற்று வதற்காக அந்தப் பணியை இன்றைக்கு விரைந்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.
- மிதவை கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு, கடல் மீன்குஞ்சு வளர்த்தெடுத்தல் மையம், நவீன உயிர்க்கூழ்ம குளங்களில் இறால் வளர்த்தல், உவர்நீர் இறால் வளர்ப்புக்கு புதிய குளங்கள் கட்டுதல் போன்ற திட்டங்களின்கீழ் 3 கோடியே 88 இலட்சம் ரூபாய் மானிய உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

இப்படி நாம் சொல்லிகொண்டே போகலாம். மீனவர்களின் நலனுக்காக தமிழ்நாடு அளவுக்கு எந்த மாநிலமும் இதுவரை இப்படிப்பட்ட காரியங்களை செய்ததில்லை. இதை என்னால் நெஞ்சை நிமிர்த்தி கம்பீரமாக நான் சொல்ல முடியும்! இன்னும் சொல்கிறேன் மீனவர்களின் நலனுக்காக இன்னும் செய்ய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்!

### மீனவர்களின் வாழ்க்கையை பாதுகாக்க அரசு நடவடிக்கை!

மீனவர்களின் வாழ்க்கை அல்லல் நிறைந்ததாக இருக்கக் கூடாது. உங்களின் தொழில் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும்; இந்தத் தொழில் எதிர்காலத்திற்கும் பயனளிக்கும் தொழிலாக இருக்க வேண்டும் என்றுதான் ஏராளமான திட்டங்களை உருவாக்கி இன்றைக்கு செயல்படுத்தி கொண்டு இருக்கிறோம்!

கல்வியறிவுதான் எல்லோரும் கரை சேருவதற்கான கலங்கரை விளக்கம்! அதனால்தான், மீனவச் சமுதாயத்தை சேர்ந்த மாணவ, மாணவியர் இந்திய குடிமைப் பணியில் சேர நினைத்தால், அவர்களுக்கு பயிற்சி தர முடிவெடுத்து, இந்த ஆண்டு மட்டும் 39 மீனவ மாணவர்களுக்கு 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் பயிற்சி தந்திருக்கிறோம்!

### எல்லோருக்கும் சம அளவில் சமவாய்ப்பு வழங்கும் அரசு!

இப்படி பார்த்துப் பார்த்து எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்; எல்லா சமூக மக்களும் முன்னேற வேண்டும் என்று எல்லோருக்கும் சம அளவில், சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம்! திட்டங்களை உருவாக்கித் தருகிறோம்! எனவே, திராவிட மாடல் அரசின் திட்டங்களை மீனவச் சமுதாயத்தின் மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் இந்த நேரத்தில் அன்போடு கேட்டு, உங்களை சந்திப்பதில் நான் மீண்டும் என்னுடைய மகிழ்ச்சியையும், பெருமையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

அண்ணா பல்கலைக் கழக மாணவி வழக்கு –

# ஞானசேகரன் குற்றவாளி - ஜீன் 2 இல் தண்டனை விபரம்!

## சென்னை மகளிர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

சென்னை, மே 29-

அண்ணா பல்கலைக் கழக மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜூன் 2ம் தேதி தண்டனை விவரம் அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், கடந்த ஆண்டு டிசம்பர் 23 ம் தேதி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக பல்கலைக்கழக மாணவி ஒருவர் கோட்டூர் புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில், விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர், ஞானசேகரனை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 24 தேதி கைது செய்தனர். பின்னர் வழக்கு விசாரணை, டிசம்பர் 28ம் தேதி பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக்குழுவுக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. கடந்த ஜனவரி மாதம் 5ம் தேதி ஞானசேகரனை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க சென்னை காவல் ஆணையர் உத்தர விட்டிருந்தார்.

இதனிடையே வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வுக்குழு, கடந்த பிப்ரவரி மாதம் 24ம் தேதி, சென்னை சைதாப்பேட்டை 9வது நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் ஞானசேகரனுக்கு எதிராக 100 பக்க குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்தது. பின்னர் இந்த வழக்கின் விசாரணை சென்னை மகளிர் நீதிமன்றத்திற்கு கடந்த மார்ச் 7ம் தேதி மாற்றப் பட்டது. இதனையடுத்து, சென்னை மகளிர் நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் 23ம் தேதி சாட்சியங்கள் விசாரணை தொடங்கி, தினந்தோறும் விசாரணை நடத்தப்பட்டது. வழக்கில் காவல்துறை தரப்பில் 29 சாட்சிகள் நேரில் ஆஜராகி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் காவல்துறை தரப்பில் சுமார் 75 சான்று ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்டது. இரு தரப்பு இறுதி வாதங்கள் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பு வழங்கினார். ஞானசேகரன் மீதான 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

---

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் துன்புறுத்தல் வழக்கில் குற்றவாளிக்கு 5 மாதங்களில் தண்டனை!

# பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும் நீதி பெறுவதிலும் திராவிட மாடல் அரசு காட்டும் உறுதிப்பாட்டிற்குக் கிடைத்துள்ள வெற்றி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அறிக்கை!

சென்னை, மே 29-

அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் துன்புறுத்தல் வழக்கில் தமிழ்நாடு அரசின் உறுதியான நடவடிக்கையால் குற்றவாளிக்கு விரைந்து தண்டனை கிடைத்துள்ளதாக கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி குறிப்பிட்டார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தில் குற்றவாளியை உடனடியாகக் கைது செய்து தண்டனைப் பெற்று தருவதற்கான உறுதியான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்தது.

குற்றம் நடந்த 24 மணி நேரத்திற்குள் குற்றச்செயலில் ஈடுபட்ட ஞானசேகரனை தமிழ்நாடு காவல் துறை கைது செய்தது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு விரைவான நீதியையும் குற்றவாளிக்கு கடுமையான தண்டனையையும் பெற்றுத்தர வேண்டும் எனும் முனைப்போடு முதலமைச்சர் அண்ணா பல்க



லைக்கழக வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் எனத் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதனடிப்படையில் கடந்த பிப்ரவரி 24 ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளி தப்பிக்க முடியாத வகையில் ஆதாரங்களைத் திரட்டி வலுவான வாதங்களை நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு எடுத்த வைத்ததின் அடிப்படையில் இன்று ஐந்தே மாதத்தில் ஞானசேகரன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும் அவர்களுக்கான விரைவான நீதியைப் பெற்று தருவதிலும் திராவிட மாடல் அரசு காட்டும் உறுதிப்பாட்டிற்கும் நடவடிக்கைகளுக்கும் இந்தத் தீர்ப்புச் சாட்சியாகியிருப்பது.

முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பெண்களுக்கு எதிரான எந்தக் குற்றங்களையும் சகித்துக் கொள்ளாது, அதற்கெதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பாதிக்கப்பட்டோருக்கு விரைவான நீதியைப் பெற்றுத் தரும் என்பது மக்கள் மன்றத்தில் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.